**ஜூலை – 27**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் (CWG) மகளிர் 75 கிலோ எடைப்பிரிவில் குத்துச்சண்டை வீராங்கனை லோவ்லினா போர்கோஹெய்ன் வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்ததன் மூலம் இந்தியா தனது முதல் பதக்கத்தைப் பெற்றுள்ளது.
- தகுதியான UPI விரைவுப் பதிலளிப்பு (QR) குறியீடுகளை வருடுவதன் மூலம் ஊழியர்கள் தங்கள் உணவு அட்டை இருப்பிலிருந்து பணம் செலுத்த அனுமதிக்கும், இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கட்டண இடைமுக (UPI) வசதியுடன் கூடிய உணவு அட்டையை 'என்கேஷ்' (EnKash) நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
  - திருத்தப்பட்ட வருமான வரி விதிகளின் கீழ் (2026 ஆம் ஆண்டு 1 ஏப்ரல் முதல் அமலுக்கு வருகிறது), வரி இல்லாத உணவுப்படி வரம்பு மாதத்திற்கு ₹8,800 அல்லது ஒரு வேளை உணவிற்கு ₹200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று ஒடிசாவில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து 'குஷா' (Kusha) நீண்ட தூரம் தரையிலிருந்து வான் நோக்கிப் பாயும் எறிகணையின் (LR-SAM) முதல் கட்டப் பரிசோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) வெற்றிகரமாக நடத்தியது.
- 350 கிலோ உந்துவிசை பிரிவில் இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய டர்போஜெட் இயந்திரத்தை (ETJE) DRDO உருவாக்கியுள்ளது.
- கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில், மாஹே-வகுப்பு ஆழ்கடல் அல்லாத பகுதிகளில் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர் நடவடிக்கைகளுக்கான கப்பலான (ASW-SWC) ஐஎன்எஸ் மால்வனை இந்தியக் கடற்படை சேவையில் இணைத்துள்ளது.
- குளோபல் ஃபைனான்ஸ் அமைப்பின் 2026 உலகளாவிய வங்கி விருதுகளில் டிபிஎஸ் (DBS) குழுமம் "உலகின் சிறந்த பெருநிறுவன வங்கி" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- உலகளவில் நீரில் மூழ்கி இறப்பதைத் தடுப்பதை ஊக்குவிக்கவும், அதனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 25 அன்று உலக நீரில் மூழ்கி இறப்பதைத் தடுக்கும் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Unite to turn the tide என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கீழடியில் புதிய கண்டுபிடிப்புகள்

- தமிழ்நாட்டில் உள்ள கீழடி தொல்லியல் தளத்தில் நடைபெற்ற 11-வது கட்ட அகழாய்வில் புதிய செங்கல் கட்டுமானங்கள், வடிகால் அமைப்புகள் மற்றும் பல தொல் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தில் மதுரைக்கு அருகே உள்ள கீழடியில் தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை (TNSDA) அகழாய்வு மேற்கொண்டு வருகிறது.
- 11-வது கட்ட அகழாய்வு 2026 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று தொடங்கி, அகழாய்வுத் தள அருங்காட்சியகப் பகுதிக்குத் தெற்கே மேற்கொள்ளப்பட்டது.
- அனைத்து ஒன்பது குழிகளிலும் தொடர்ச்சியான செங்கல் கட்டுமானங்கள் காணப்

பட்டன, மேலும் அவை தோண்டப்பட்ட பகுதிக்கு அப்பால் மேற்கு மற்றும் வடக்கு நோக்கி நீண்டுள்ளன.

- ஒரு குழியில் சுடுமண் குழாய் மற்றும் மூடிய வடிகால் அமைப்பு காணப்பட்டதுடன், இது திட்டமிட்ட குடியிருப்பின் அம்சங்களைக் காட்டுகிறது.
- சுடுமண் மணிகள், தக்களிகள், இரும்புக் கத்திகள், உளி, வாள்கள், ஆணிகள், விலை மதிப்பற்ற கற்கள், தந்தத்தாலான பகடை மற்றும் சிறிய தங்க ஆபரணங்கள் உட்பட 1,300-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.
- மீன் சின்னம் பொறிக்கப்பட்ட ஒரு பானை உட்பட முழுமையான பானைகளும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன என்பதோடு மேலும் அதிலுள்ள கரிம எச்சங்கள் கார்பன் காலக் கணிப்பிற்கு அனுப்பப்படும்.




# தேசியச் செய்திகள்

## பாரத் டெக்ஸ் 2026





- இது டெல்லியில் நடைபெறும் இந்தியாவின் மிகப்பெரிய உலகளாவிய ஜவுளித் துறை நிகழ்வாகும்.
- 138 நாடுகளைச் சேர்ந்தவர்களின் சாதனை அளவிலான சர்வதேசப் பங்கேற்புடன் இது தொடங்கி வைக்கப்பட்டது.

- ❖ ஜவுளித் துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் 'பாரத் டெக்ஸ் வர்த்தகக் கூட்டமைப்பு' (BTTF) ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு, ஜவுளித் துறையின் ஒருங்கிணைந்த மதிப்புச் சங்கிலி சார்ந்த உலகின் மிகப்பெரிய நிகழ்வாகத் திகழ்கிறது.

## இந்தியாவின் மிகப்பெரிய கிராம அளவிலான தொலைத்தொடர்பு வலையமைப்பு செயல்திறன் கணக்கெடுப்பு


- ❖ இந்த அகில இந்தியக் கணக்கெடுப்பானது, தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள அஞ்சல் துறை மற்றும் டிராய் (TRAI) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- ❖ 5.68 லட்சம் கிராமங்களில் இந்தியாவின் மிகப்பெரிய கிராம அளவிலான தொலைத் தொடர்பு வலையமைப்பு செயல்திறன் கணக்கெடுப்பை நடத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- ❖ 1.4 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம அஞ்சல் ஊழியர்கள் (கிராமப்புற அஞ்சல் பணியாளர்கள்), வழக்கமான விநியோகங்களின் போது, டிராய் உருவாக்கிய ஆண்ட்ராய்டு செயலியைப் பயன்படுத்தி ஏர்டெல், ஜியோ, VI மற்றும் BSNL ஆகியவற்றின் பரவலை மதிப்பிடுவார்கள்.
- ❖ "பரவல் இல்லாத பகுதிகளை" அடையாளம் காணவும், எதிர்கால தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு முதலீடுகளுக்கு வழிகாட்டவும், நுணுக்கமான கள அளவிலான தரவுகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.




## விஸ்வாஸ் திட்டம் 2026

- ❖ இது பாதகமான கூடுதல் கட்டணங்களை விரைவாக விசாரிப்பதற்கும் தள்ளுபடி செய்வதற்கும் ஆன ஒரு தன்னார்வ முன்னெடுப்பு அல்லது விஸ்வாஸ் ஆகும்.
- ❖ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் விஸ்வாஸ் 2026 திட்டத்தை அதிகாரப் பூர்வமாகத் தொடங்கி வைத்தது.
- ❖ இது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பால் (EPFO) தொடங்கப்பட்ட ஒரு முறை தீர்வு காணும் திட்டமாகும்.
- ❖ இது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வகைச் சட்டங்கள், 1952 அல்லது சமூகப் பாதுகாப்புச் சட்டம், 2020-இன் கீழ் விதிக்கப்பட்ட சேதங்கள் / தண்டனைகள் தொடர்பான தகராறுகளுக்கு மட்டுமே கண்டிப்பாகப் பொருந்தும்.

- இது தன்னார்வ இணக்கத்தை ஊக்குவிப்பதையும், நீடித்த வழக்குகளைக் கட்டுப் படுத்துவதையும், அபராதங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான நீண்ட காலமாக நிலுவையில் உள்ள முதலாளி தகராறுகளுக்கு விரைவான டிஜிட்டல் தீர்வை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## 3-வது பிரிக்ஸ் அமைச்சர்கள் மாநாடு




- புது தில்லியில் பேரிடர் அபாயக் குறைப்பு (DRR) குறித்த 3-வது பிரிக்ஸ் அமைச்சர்கள் மாநாட்டை இந்தியா தொகுத்து வழங்கியது, இதில் உறுப்பு நாடுகள் ஒரு கூட்டு அறிக்கையை ஏற்றுக் கொண்டன.
- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் ஒரு பகுதியாக உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தது.
- பிரிக்ஸ் பேரிடர் அபாயக் குறைப்புப் பணித் திட்டத்தை (2025–2028) செயல் படுத்துவதற்கான உறுதிப்பாட்டை இந்தக் கூட்டு அறிக்கை மீண்டும் உறுதிப் படுத்தியது.
- முன் எச்சரிக்கை அமைப்புகள், நெகிழ்வுத்தன்மை கொண்ட உள்கட்டமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், இயற்கை சார்ந்த தீர்வுகள் மற்றும் சமூக மீள்திறன் உள்ளிட்ட ஐந்து முன்னுரிமைப் பகுதிகளை இந்தியா எடுத்துரைத்தது.

- பிரிக்ஸ் நாடுகளில் கொள்கை உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்காக பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த ஆறு முதன்மை அறிவுசார் தயாரிப்புகள் வெளியிடப்பட்டன.
- பேரிடர் மீள்திறனை மேம்படுத்துவதற்காக, பருவநிலைக்கேற்ற உள்கட்டமைப்பு, அறிவுப் பகிர்வு, கூட்டுத் திட்டங்கள் மற்றும் உருவகப்படுத்துதல் பயிற்சிகள் ஆகியவற்றிலும் இக்கூட்டம் கவனம் செலுத்தியது.

## பிரிக்ஸ் அறிவியல் கழகங்களின் மன்றம் 2026

- நிலையான வளர்ச்சி மற்றும் உலகளாவிய தெற்கு ஒத்துழைப்பிற்கான செயற்கை நுண்ணறிவில் (AI) கவனம் செலுத்தி, 2026 ஆம் ஆண்டின் பிரிக்ஸ் அறிவியல் கழகங்களின் மன்றம் ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) நிறைவடைந்தது.
- இம்மன்றத்தை இந்திய தேசிய அறிவியல் கழகம் (INSA) ஏற்பாடு செய்தது.
- இதன் கருத்துரு "நிலையான மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துதல் மற்றும் உலகளாவிய தெற்கு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்" என்பதாகும்.
- உலகளாவிய சவால்களுக்கான நெறிமுறை, உள்ளடக்கிய மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட AI அணுகுமுறைகள் குறித்து இம்மன்றம் விவாதித்தது.
- மேம்பட்ட உற்பத்தி, சுகாதாரம், பருவநிலை மாற்றம், விவசாயம் மற்றும் பேரிடர் கணிப்பு மற்றும் மேலாண்மை ஆகிய ஐந்து AI முன்னுரிமைப் பகுதிகளை இது அடையாளம் கண்டுள்ளது.




## 16-வது பிரிக்ஸ் சுகாதார அமைச்சர்கள் மாநாடு 2026

- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டு பிரிக்ஸ் தலைமையின் கீழ் 16-வது பிரிக்ஸ் சுகாதார அமைச்சர்கள் மாநாடு சண்டிகரில் முடிவடைந்ததுடன் இதில் 16-வது பிரிக்ஸ் சுகாதார அமைச்சர்கள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- பொது சுகாதார ஒத்துழைப்பு, சுகாதார சமத்துவம், நெகிழ்வுத்தன்மை கொண்ட சுகாதார அமைப்புகள் மற்றும் உலகளாவிய சுகாதாரச் சவால்கள் ஆகியவற்றில் இந்த கூட்டம் கவனம் செலுத்தியது.

- ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பகிர்வுக்காக பாரம்பரிய, முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான (TCIM) பிரிக்ஸ் நிபுணர் பணிக்குழுவை நிறுவுவதற்கு பிரிக்ஸ் நாடுகள் ஆதரவளித்தன.
- இக்கூட்டம் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கான பிரிக்ஸ் திட்டத்தைத் தொடங்கி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை மேம்பாட்டு வழிகாட்டுதலுக்கு (2026–2029) ஒப்புதல் அளித்தது.
- தேசிய மனநல மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தை (NIMHANS) ஒருங்கிணைப்பு மையமாகக் கொண்ட மனநலத்திற்கான பிரிக்ஸ் சிறப்பு மையங்களின் கூட்டமைப்பை இந்தியா அறிவித்தது.




# பொருளாதாரச் செய்திகள்

## RBI நிதிச் சேர்க்கை குறியீடு 2026

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI), நாட்டின் நிதிச் சேர்க்கை குறியீட்டில் (FI-Index) முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது; இக்குறியீடு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 67.0-ஆக இருந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 70.0-ஆக உயர்ந்துள்ளது.
- இந்தச் சீரான உயர்வு, நாடு முழுவதும் நிதிச் சேவைகளை விரிவுபடுத்துவதிலும், நிதிச் செயல்பாடுகளில் மக்களின் பங்கேற்பை ஆழப்படுத்துவதிலும் இந்தியா அடைந்து வரும் தொடர்ச்சியான முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.
- அடிப்படை ஆண்டு ஏதுமின்றி 97 குறியீடுகளைக் கண்காணிக்கும் இந்தக் கூட்டு நிதிச் சேர்க்கை குறியீடு (FI-Index), இந்தியாவின் நிதிச் சூழல் அமைப்பை மூன்று முக்கிய அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடுகிறது: அணுகல் (35 சதவீத முக்கியத்துவம்), பயன்பாடு (45 சதவீதம்) மற்றும் தரம் (20 சதவீதம்).
- இக்குறியீடு முதன்முதலில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் (2021 ஆம் ஆண்டு


மார்ச் மாதத்தில் முடிவடைந்த நிதியாண்டிற்காக) அறிமுகப்படுத்தப்பட்டது; இது ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.




## மின்னணு தங்க ரசீதுகள் (EGRs)


- இந்திய தேசிய பங்குச் சந்தையானது (NSE), மின்னணு தங்க ரசீதுகளை (EGRs) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது இந்தியாவின் தங்கச் சந்தையில் அதிக வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் முறைப்படுத்தலைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய பிரிவாகும்.
- தங்க வர்த்தகத்திற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான தளத்தை வழங்குவதன் மூலம், பௌதீகத் தங்கத்திற்கும் நிதிச் சந்தைகளுக்கும் இடையிலான இடைவெளியை இது குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- EGRs என்பவை பௌதீகத் தங்கத்தின் உரிமையைக் குறிக்கும், மின்னணு மயமாக்கப் பட்ட பத்திரங்கள் ஆகும்.
- பௌதீகத் தங்கம், இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புப் பெட்டகங்களில் சேமிக்கப்பட்டு, வைப்பகங்கள் மூலம் மின்னணு முறையில் வைத்திருக்கப்படுகிறது.
- ஒவ்வொரு EGR-உம் முழுமையாக பௌதீகத் தங்கத்தால் ஆதரிக்கப்படுகிறது மற்றும் பரிவர்த்தனைச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படலாம், இது தங்கத்தை முறையான நிதி அமைப்பில் ஒருங்கிணைக்கிறது.
- EGRs, முதலீட்டாளர்கள் தங்கத்தை உறுதியான தரத்துடன் மின்னணு முறையில் வைத்திருக்க அனுமதிக்கும், மேலும் பௌதீக மற்றும் டிஜிட்டல் வடிவங்களுக்கு இடையில் தடையற்ற மாற்றத்தையும் செயல்படுத்தும்.
- டிமேட் வடிவில் உள்ள மற்ற நிதிக் கருவிகளைப் போலவே, முதலீட்டாளர்கள் குறைந்த அளவிலும் பங்கேற்கலாம் என்பதோடு இது மேம்பட்ட பணப்புழக்கம் மற்றும் நெகிழ்வுத் தன்மையை வழங்குகிறது.

- தங்க வர்த்தகத்திற்கான ஒரு வலுவான மற்றும் வெளிப்படையான சூழலமைப்பை உருவாக்குவதை NSE நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம், திறமையான விலை நிர்ணயம், மேம்பட்ட சந்தைப் பங்கேற்பு மற்றும் நகை வியாபாரிகள், சுத்திகரிப்பாளர்கள், வர்த்தகர்கள், நிறுவன முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பங்கு தாரர்களிடையே அதிகரித்த நம்பிக்கை ஆகியவற்றை இது சாத்தியமாக்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குறைந்த செலவிலான துத்தநாக-காற்று மின்கலத் தொழில்நுட்பம்




- ஆற்றல் சேமிப்பு மற்றும் மின்சார வாகனங்களுக்காக குறைந்த செலவிலான துத்தநாக-காற்று மின்கலத் தொழில்நுட்பங்களை (zinc-air battery) இந்திய அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- துத்தநாக-காற்று மின்கலங்கள் துத்தநாகத்தை நேர்மின்வாயாகவும், காற்றில் உள்ள ஆக்ஸிஜனை எதிர்மின்வாய் வினைபொருளாகவும் பயன்படுத்துகின்றன, இது அதிக ஆற்றல் அடர்த்தியை வழங்குகிறது.
- சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஒரு நிலையான நானோ திரவ மின்பகுளி மற்றும் குறைந்த செலவிலான தாமிரம் கலந்த மாங்கனீசு டை ஆக்சைடு வினையூக்கியை உருவாக்கியுள்ளனர்.
- சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT) இயந்திரத்தனமாக மின்னேற்றம் செய்யக்கூடிய துத்தநாக-காற்று மின்கலங்களை உருவாக்கி வருகிறது, மேலும் ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துடன் இணைந்து 1 கிலோவாட்-மணிநேரம் (kWh) மின்னேற்றம் செய்யக்கூடிய ஒரு முன்மாதிரியை உருவாக்கி வருகிறது.

- துத்தநாக-காற்று மின்கலங்கள் நீர் சார்ந்த மின்பகுளிகளைப் பயன்படுத்துகின்றன, இதனால் அவை பல லித்தியம்-அயனி மின்கலங்களை விட குறைவான எரியும் தன்மையைக் கொண்டுள்ளன.

## இந்தியாவின் உள்நாட்டு சிறிய வகை அணு உலைகள்


- 2033 ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட குறைந்தது ஐந்து சிறிய வகை அணு உலைகளை (SMRs) உருவாக்கி செயல்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.
- பாபா அணு ஆராய்ச்சி மையமானது (BARC) 220 மெகாவாட் மின் (MWe) பாரத் SMR, 55 MWe SMR மற்றும் 5 மெகாவாட் வெப்பம் (MWth) வரையிலான உயர்-வெப்பநிலை வாயு-குளிரூட்டப்பட்ட உலை (HTGR) ஆகிய மூன்று உலை வகைகளை வடிவமைத்து வருகிறது.
- பாரத் SMR மற்றும் SMR-55 ஆகியவை அழுத்தப்பட்ட நீர் உலை (PWR) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன, இது உயர் அழுத்த நீரை குளிரூட்டியாகவும் மட்டுப்படுத்தியாகவும் பயன்படுத்துகிறது.
- அணுக்கரு வெப்பத்தைப் பயன்படுத்தி ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய விசாகப் பட்டினத்தில் HTGR உருவாக்கப்படும்.
- இந்தியா 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் (GW) அணுமின் திறனை அடைய இலக்கு வைத்துள்ளதுடன் இதில் 2031–32 ஆம் ஆண்டிற்குள் சுமார் 22 GW இலக்காக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.




## போரோபீன் அடிப்படையிலான பசுமை மசகு எண்ணெய் தொழில்நுட்பம்

- குவஹாத்தியில் உள்ள மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்தின் (IASST) ஆராய்ச்சியாளர்கள் ஆமணக்கு எண்ணெயைப் பயன்படுத்தி போரோபீன் அடிப்படையிலான பசுமை மசகு எண்ணெய் சேர்க்கையை உருவாக்கி உள்ளனர்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனமான IASST, போரோபீனை அதிக செயல்திறன் கொண்ட மசகு எண்ணெய் சேர்க்கையாக முதல் முறையாகப் பயன்படுத்துவதை நிரூபித்துள்ளது.
- போரோபீன் என்பது அதிக இயந்திர வலிமை மற்றும் மின் கடத்துத்திறன் கொண்ட போரான் அணுக்களால் முழுமையாக உருவாக்கப்பட்ட இரு பரிமாண (2D) நானோ பொருளாகும்.

- ஆமணக்கு எண்ணெயில் 0.1 எடை சதவீதம் (wt%) போரோஃபீனைச் சேர்ப்பதன் மூலம், தூய ஆமணக்கு எண்ணெயுடன் ஒப்பிடுகையில் உராய்வு சுமார் 42% குறைக்கப் படுகிறது.
- இந்தத் தொழில்நுட்பம் இயந்திரத் திறனை மேம்படுத்துகிறது, ஆற்றல் இழப்பு மற்றும் தேய்மானத்தைக் குறைக்கிறது, மேலும் நிலையான பசுமை மசகு பயன்பாடுகளை ஆதரிக்கிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### வளாகப் பல்லுயிர் பதிவேடு முன்னெடுப்பு




- கல்லூரி மற்றும் பல்கலைக்கழக வளாகங்களில் உள்ள பல்லுயிர்களை ஆவணப் படுத்துவதற்காக தேசிய பல்லுயிர் ஆணையத்துடன் (NBA) இணைந்து இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை (NCF), வளாக பல்லுயிர் பதிவேடு (CBR) முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- தேசியப் பல்லுயிர் ஆணையம் (NBA) என்பது உயிரியல் வளங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டை ஒழுங்குபடுத்தும், ஆலோசனை வழங்கும் மற்றும் ஊக்குவிக்கும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- கிராமம், நகரம் மற்றும் மாநகர அளவிலான பல்லுயிர் மற்றும் பாரம்பரிய அறிவை ஆவணப்படுத்தும் மக்கள் பல்லுயிர் பதிவேட்டினால் (PBR) ஈர்க்கப்பட்டு வளாக பல்லுயிர் பதிவேடு (CBR) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் கணக்கெடுப்புகள், வளாக நடைகள் மற்றும் வழக்கமான அவதானிப்புகள் மூலம்

பல்லுயிர்களை ஆவணப்படுத்துவார்கள்.

- இந்த முன்னெடுப்பானது பல்லுயிர்த் தரவுகளைப் பதிவு செய்ய iNaturalist, eBird மற்றும் Season Watch போன்ற குடிமக்கள் அறிவியல் தளங்களைப் பயன்படுத்துகிறது.
- வளாக பல்லுயிர் பதிவேடானது (CBR) பல்லுயிர் பாதுகாப்பை வலுப்படுத்துவது, சுற்றுச் சூழல் அமைப்பு மேலாண்மையை மேம்படுத்துவது மற்றும் மாணவர்களிடையே அறிவியல் விழிப்புணர்வை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## துத்வா புலிகள் காப்பகத்தில் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை



The rhino population in the Dudhwa Tiger Reserve (DTR) has increased to 53, according to the fourth rhino census conducted between June 25 and 27. Their population has now grown more than seven-fold and coexists with tigers, elephants, leopards and sloth bears in Dudhwa. The latest census recorded 17 adult males, 25 adult females and 11 calves older than one year. Among them are eight rhinos aged 10-15 years.

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள துத்வா புலிகள் காப்பகத்தில் (DTR) இந்தியக் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை 53-ஆக உயர்ந்துள்ளது.
- இதற்கான நான்காவது காண்டாமிருகக் கணக்கெடுப்பு 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டது.
- அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைப் போலவே, உத்தரப் பிரதேசமும் 'பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின்' இயற்கையான வாழ்விடத்தைக் கொண்ட இந்தியாவின் மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
- துத்வா புலிகள் காப்பகம் உத்தரப் பிரதேசத்தின் லக்கிம்பூர்-கேரி மாவட்டத்தில், இந்தியா-நேபாள எல்லையில் அமைந்துள்ளது.
- இது தனித்துவமான 'தெராய்' (Terai) புல்வெளி மற்றும் சதுப்பு நிலச் சூழலமைப்பைக் கொண்டுள்ளது.
- மரபணுப் பன்முகத்தன்மையை மேம்படுத்தவும், நெருங்கிய இனச் சேர்க்கையால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கவும், 11 காண்டாமிருகங்கள் அடைப்புக்களிலிருந்து விடுவிக்கப் பட்டு, காட்டில் சுதந்திரமாக உலாவ விடப்பட்டுள்ளன.

- இது வங்காளப் புலி, சதுப்பு நில மான் (பராசிங்கா) மற்றும் ஆசிய யானை போன்ற அழிந்து வரும் உயிரினங்களின் வாழ்விடமாகவும் விளங்குகிறது.

### இந்தியாவின் முதல் இரவு நேர உலா

- உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள குக்ரைல் இரவு நேர உலா திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இது இந்தியாவின் முதல் இரவு நேர உலா மற்றும் இந்தியாவின் முதல் நகர்ப்புற இரவு நேர உலா எனக் குறிப்பிடப்படுகிறது.
- சிங்கப்பூர், தாய்லாந்து, சீனா மற்றும் இந்தோனேசியாவிற்குப் பிறகு, இது உலகின் ஐந்தாவது திட்டமாகும்.
- இதற்கு மத்திய விலங்கியல் பூங்கா ஆணையம் (CZA) மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடம் இருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது.
- இந்தக் காட்டில் குக்ரைல் கரியால் மறுவாழ்வு மையமும் அமைந்துள்ளது.
- இது இந்தியாவின் முதல் கரியால் பாதுகாப்பு மையமாகவும் திகழ்கிறது.
- மிகவும் அருகி வரும் இனமான கரியால்களைப் பாதுகாப்பதற்காக இது 1975-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியாவில் இரவு நேர உலாக்கள், மத்திய விலங்கியல் பூங்கா ஆணையத்தின் இரவு நேர உலா வழிகாட்டுதல்கள் மற்றும் 1972-ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின்படி நிர்வகிக்கப்படுகின்றன.
- மத்திய விலங்கியல் பூங்கா ஆணையம் என்பது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள விலங்கியல் பூங்காக்களை ஒழுங்குபடுத்தும் சட்டப்பூர்வ அமைப்பாகும்.





## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### NFHS-6 சுகாதார அறிக்கை 2026

- சமீபத்திய தேசிய குடும்ப சுகாதார ஆய்வு-6 (NFHS-6) தாய் மற்றும் சேய் சுகாதாரக் குறியீடுகளில் உள்ள மேம்பாடுகளையும், பெரியவர்களிடையே வாழ்க்கை முறை தொடர்பான நோய்களின் அதிகரிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

- மருத்துவமனை சார்ந்த பிரசவங்கள் 88.6% (NFHS-5: 2019–21) இலிருந்து 90.6% (NFHS-6: 2023–24) ஆக அதிகரித்துள்ளது, அதே வேளையில் கர்ப்பகாலப் பராமரிப்பு 95.9% ஐ எட்டி உள்ளது.
- குழந்தைகளின் சுகாதாரக் குறியீடுகள் மேம்பட்டுள்ளன, முழுமையான நோய்த் தடுப்பு மருந்து வழங்குதல் 87.1% ஆக அதிகரித்துள்ளது மற்றும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடையே வளர்ச்சி குறைபாடு 35.5% இலிருந்து 29.3% ஆக குறைந்து உள்ளது.
- பெரியவர்களிடையே அதிக எடை, உடல் பருமன் மற்றும் நீரிழிவு நோய்கள் அதிகரித்துள்ளன, இது வாழ்க்கை முறை தொடர்பான நோய்களின் எழுச்சியைக் குறிக்கிறது.
- இந்தியாவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) மாற்று அளவான 2.1 க்கும் குறைவாக 2.0 என்ற அளவில் நிலையாக உள்ளது.




## முதலீட்டாளர்களுக்கு உகந்த மாநிலங்கள் குறியீடு

- நிதி ஆயோக் “முதலீட்டாளர்களுக்கு உகந்த மாநிலங்கள் குறியீடு” குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- முதலீட்டாளர்களுக்கு உகந்த மாநிலங்கள் குறியீடு (IFI) குறித்த முதல் அறிக்கை இதுவாகும்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும், எளிதாக்குவதிலும், நிலை நிறுத்துவதிலும் இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் (UTs) தயார் நிலையை அளவுகோலாகக் கொண்டு மதிப்பிடுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது எட்டு தூண்களின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் முதலீட்டுத் தயார்நிலையை மதிப்பிடும் ஒரு உள்நாட்டு கட்டமைப்பாகும்.
- முதலீட்டை ஈர்ப்பதற்கான சிறந்த இடமாக குஜராத் இந்தக் குறியீட்டில் முதலிடம் வகிக்கிறது.
- அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கோவா மற்றும் ஒடிசா ஆகியவை உள்ளன.
- மலைப்பாங்கான மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் - உத்தரகாண்ட் முதலிடத்தைப் பிடித்தது, அதனைத் தொடர்ந்து அசாம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் உள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் நகர மாநிலங்கள் - டெல்லி மற்றும் சண்டிகர்.

***எட்டு முக்கிய தூண்கள்:***

- உள்கட்டமைப்பு: பௌதீக தளவாடங்கள், மின்சார நம்பகத்தன்மை மற்றும் டிஜிட்டல் இணைப்பு.
- வணிகச் சூழல்: ஒற்றைச் சாளர அனுமதிகளின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டுத் தொடர்ச்சி.
- வளங்கள்: தொழில்துறை நிலம், திறமையான தொழிலாளர் தொகுப்புகள் மற்றும் மூலப்பொருட்களின் கிடைக்கும்தன்மை.
- அரசாங்கக் கொள்கை: காலப்போக்கில் கொள்கையின் முன்கணிப்புத்தன்மை மற்றும் நிலைத்தன்மை.
- ஒழுங்குமுறை எளிமை: அதிகாரத்துவ உராய்வுகள் மற்றும் இணக்கச் சுமைகளைக் குறைத்தல்.
- நிறுவனச் சூழல்: அரசு நிறுவனங்களின் திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பதிலளிக்கும் தன்மை.
- நிதி ஆரோக்கியம்: நிதிசார் விவேகம் மற்றும் மாநில அளவிலான பேரியல் பொருளாதாரக் குறிகாட்டிகள்.
- சுற்றுச்சூழல் மீள்திறன்: நிலைத்தன்மை மற்றும் சூழலியல் இணக்க அளவுருக்கள்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பெண்கள் மேம்பாட்டிற்கான பாரத் சம்மான் 2026

- இந்த விருது, புகழ்பெற்ற சமூக ஆர்வலர் டாக்டர் நந்தினி ஆசாத்துக்கு முக்கியமாக வழங்கப்பட்டது.
- வொர்க்கிங் விமன்ஸ் ஃபோரம் (இந்தியா) மற்றும் இந்தியன் கோ-ஆப்பரேட்டிவ் நெட்வொர்க் ஃபார் விமன் ஆகியவற்றின் மூலம், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நூறாயிரக்கணக்கான பெண்களை மேம்படுத்துவதில் அவர் பல தசாப்தங்களாக ஆற்றிய அடிமட்ட முயற்சிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டார்.
- டேராடூனில் சர்வதேச கல்வி மற்றும் மேலாண்மை நிறுவனம் மற்றும் பொருளாதார வளர்ச்சி அறக்கட்டளை ஆகியவற்றால் நடத்தப்பட்ட ஒரு விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.

- நந்தினி ஆசாத், வொர்க்கிங் விமன்ஸ் ஃபோரம் (இந்தியா) (WWF-I) மற்றும் இந்தியன் கோ-ஆப்பரேட்டிவ் நெட்வொர்க் ஃபார் விமன் (ICNW) ஆகியவற்றின் தலைவராக உள்ளார்.
- WWF-I மற்றும் ICNW ஆகியவை பெண்களால் வழிநடத்தப்படும் அடிமட்ட இயக்கங்களாகும் என்பதோடு இவை நான்கு தென்னிந்திய மாநிலங்களில் 6 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களை ஒன்றிணைக்கின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★